**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| Case Number | : CC.No.51/2021 |
| Deposition of Witness for | : PW – 1 |
| Name and Age | : காவேரியம்மாள் (வயது 67) |
| Father / Husband Name | : க/பெ. பெரியசாமி |
| Occupation | : கூலி |
| Village | : மகேந்திரமங்கலம் |
| Taluk | : பாலக்கோடு |

**நாள்** – 09.06.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused present.**

**PW– 1**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது மகேந்திரமங்கலத்தில் குடியிருந்துக்கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். 06.04.2019ம் தேதி மதியம் சுமார் 02.00மணிக்கு என் மகன் குமரேசன் வீட்டில் இருந்து இருசக்கர வாகனத்தில் ஜிட்டாண்டஅள்ளிக்கு ஏடிஎம்–ல் பணம் எடுக்க சென்றார். என் மகன் பாலக்கோடு வழியாக ஜிட்டாண்டஅள்ளிக்கு சென்றார் அவருக்கு எதிரே ராயக்கோட்டைக்கு பக்கம் இருந்து பாலக்கோடிற்கு DNC பேருந்து வந்தது. முனியப்பன் மாந்தோப்பு அருகே என் மகன் சென்றுக்கொண்டிருந்தபோது பேருந்து வேகமாக வந்து என் மகனின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. என் மகன் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். எனக்கு போன் மூலமாக நடராஜன் மற்றும் சண்முகம் சொன்னார்கள். நாங்கள் சம்பவ இடம் போய் பார்த்தோம். என் மகனை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு எடுத்துக்கொண்டு போனார்கள். பிறகு விபத்து சம்மந்தமாக என் உறவினர் எழுதிக்கொடுத்த புகாரை மகேந்திரமங்கலம் காவல்நிலையத்தில் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் அ.சா.ஆ.1–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்தவர் எனக்கு மகன் ஆவார். சம்பவம் பற்றி கேள்விபட்டு தான் விபத்து பற்றி தெரிந்துக்கொண்டேன். தகவல் கிடைத்த உடனே சம்பவ

AJAY VIKRESH KUMAR G Digitally signed by AJAY VIKRESH KUMAR G Date: 2026.06.09 18:20:27 +0530

இடம் சென்றுவிட்டேன். வழக்கு விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. வழக்கு பற்றி தெரியாது என்றாலும், விபத்தில் இறந்தவர் எனது மகன் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.09 18:20:32 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.51/2021 |
| Deposition of Witness for | : | PW – 2 |
| Name and Age | : | சங்கர் (வயது 42) |
| Father / Husband Name | : | ராஜா |
| Occupation | : | கூலி |
| Village | : | மகேந்திரமங்கலம் |
| Taluk | : | பாலக்கோடு |

**நாள்** – 09.06.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused present.**

**PW– 2**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது மகேந்திரமங்கலத்தில் குடியிருந்துக்கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். 06.04.2019ம் தேதி என் மச்சான் குமரேசன் என்னுடைய இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு ஜிட்டாண்டஅள்ளி ATM–ல் பணம் எடுக்க மதியம் சுமார் 02.10மணிக்கு சென்றார். ஓசூரில் இருந்து ராயக்கோட்டை மேல் பாலக்கோடுக்கு வந்த DNC பஸ் வேகமாக வந்து என் மச்சான் சென்ற இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்படுத்தினார். விபத்து முனியப்பன் மாந்தோப்பு அருகே நடந்தது. எனக்கு போன் மூலமாக அக்கம் பக்கம் இருப்பவர்கள் தகவல் சொன்னார்கள். நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது என் மச்சான் குமரேசனுக்கு தலை மற்றும் காலில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துகிடந்தார். பின்பு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தோம். என் மச்சான் குமரேசனை மருத்துவர் பரிசோதித்து அவர் இறந்துவிட்டதாக சொல்லி சவக்கிடங்கில் வைத்துவிட்டார்கள். இது சம்மந்தமாக புகார் அளிக்க நாங்கள் காவல்நிலையம் சென்றோம். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்தவர் எனது மச்சான் ஆவார். சம்பவம் பற்றி கேள்விபட்டு தான் சம்பவ இடம் சென்றேன். விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.09 18:20:40 +0530

என்றால் சரிதான். யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று தெரியாது. விபத்து பற்றி எனக்கு தெரியாது என்றாலும், இறந்தவர் என் மச்சான் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.09 18:20:46 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.51/2021 |
| Deposition of Witness for | : | PW – 3 |
| Name and Age | : | உமா (வயது 47) |
| Father / Husband Name | : | க/பெ. மகேஸ் |
| Occupation | : | கூலி |
| Village | : | மகேந்திரமங்கலம் |
| Taluk | : | பாலக்கோடு |

**நாள்** – 09.06.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused present.**

**PW– 3**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் மகேந்திரமங்கலத்தில் குடியிருந்துக்கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். 06.04.2019ம் தேதி என் தம்பி குமரேசன் மதியம் சுமார் 02.10மணிக்கு ஜிட்டாண்டஅள்ளிக்கு ATM–ல் பணம் எடுக்க இருசக்கர வாகனத்தில் சென்றார் அப்போது ராயக்கோட்டைக்கு பக்கம் இருந்து வந்த DNC பேருந்து வேகமாக வந்து முனியப்பன் மாந்தோப்பு அருகே என் தம்பியின் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. இது சம்மந்தமாக என் மகன் எனக்கு தகவல் சொன்னார். நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தோம். என் தம்பி குமரேசன் தலை மற்றும் காலில் காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்து கிடந்தார். என் தம்பி குமரேசனின் உடலை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தோம். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்தவர் எனது தம்பி ஆவார். சம்பவம் பற்றி கேள்விபட்டு தான் சம்பவ இடம் சென்றேன். விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து பற்றி எனக்கு தெரியாது என்றாலும், இறந்தவர் என் தம்பி என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.09 18:20:52 +0530

Judicial Magistrate,
Palacode.